முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 388/2017

தேதி : 15-03-2024

(வா.சா.1) – பரமேஸ்வரி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2,3,6,8,9 பிரதிவாதிகள் தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

என் அப்பாவுடன் பிறந்த அத்தைகளின் பெயர் மற்றும் வாரிசுகள் பற்றி தற்போதும் எனக்கு தெரியாது. என் கணவர் பெயர் ரவிச்சந்திரன். என் மாமனாரின் மூத்த மனைவிதான் என் அத்தையா என்றால் இல்லை, என் மாமனாரின் 3 வது மனைவிதான் என் மாமியார். என் கணவரின் பெரியம்மா பெயர் பழனியம்மாள் என்றால் எனக்கு தெரியாது. தெய்வம் என்பவரின் அம்மா தான் என் அத்தை என்றால் அவ்வாறு தான் சொல்லி கொண்டார்கள், ஆனால் அவரை எனக்கு தெரியாது. மேற்படி தெய்வம் என்பவர் என் கணவரின் அப்பாவின் மூத்த தாரத்தின் மகள். என் அப்பாவின் அக்கா பெயர் பெருமாளக்கா ஆகும். என் அத்தை பெருமாளக்காவை எங்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் பண்ணைக்காட்டில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். பெருமாளக்காவின் மகள் தெய்வம் திருப்பூரில் உள்ளார். பெருமாளக்கா இறந்துவிட்டார். என் இன்னொரு அத்தை கே.சி.பட்டியில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். அவர் பற்றி கேள்விப்பட்டுள்ளேன். என்னுடைய 3 அத்தைகளுக்கும் வாரிசுகள் இருப்பது தெரியுமா என்றால் உள்ளூரில் உள்ள அத்தைக்கு வாரிசு உள்ளதாக கேள்விப்பட்டுள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணம் என் அப்பா

பெயரிலுள்ள பட்டாவின் நகல் ஆகும். என்னிடம் காட்டப்படும் பட்டாவின் ஜெராக்ஸ் நகல் ராமன் செட்டியார் மகன் பெருமாள் செட்டியார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் பட்டா சொத்தை தயர் அனுபவிக்கிறர்களோ அவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது என்றும், அவர்களது வாரிசுகளுக்கு அதில் உரிமையில்லை என்றால் சரியல்ல. அதை மறைப்பதற்காகதான் கணினி சிட்டா மட்டும் வாங்கி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1லக்க சொத்து என் தகப்பனார் அனுபவித்து வந்ததால் அரசாங்கத்தால் அவருக்கு வழங்கப்பட்ட செட்டில்மெண்ட் பட்டா மூலம் கிடைத்த சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள வீடு 13.03.1953 அழகுசாமி செட்டியாரிடம் இருந்து என் அப்பா வாங்கிய சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தை எனக்கு தருவதாக என் அப்பா சொன்னார், ஆனால் தரவில்லை என்பதால்தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்போ வழக்கு சொத்துக்களை பொறுத்து என் அப்பா 8ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம்எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.அதற்கு முன்பு என் அப்பாவிற்கு 4ம் பிரதிவாதி அவ்வாறு 8ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யவேண்டும் அறிவிப்பு அனுப்பினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் கேள்விப்பட்டுள்ளேன். அதற்கு என் அப்பா அந்த சொத்துக்கள் தனக்கு தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், தான் யாருக்கும் வேண்டுமானாலும் அதனை எழுதிக்கொடுப்பேன் என்று பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. என் அப்பா பதில் அனுப்பிய விபரம் எனக்கு தெரியாது, ஆனால் கேள்விப்பட்டுள்ளேன். செல்வராணியின் கணவர் என் அப்பாவிற்கு விடுதலை பத்திரம் 30.12.1982ம் தேதி

எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு திருமணமாககி சென்றதில் இருந்து சொத்தில் என்கு பங்கு கொடுக்காததால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா யாருக்குமே பங்கு கொடுக்கவில்லை. தாவா சொத்துக்கள் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்றும் அதனால் அதனை யாருக்கும் பங்கு கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்றும், அதனால் தான் அவர் பங்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு படி தாவா சொத்துக்கள் என் தாத்தா ராமன் செட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். ராமன் செட்டியாரின் சொத்துக்கள் என்றால் அதில் என் அப்பாவிற்கும் அவர்களுடன் பிறந்த அனைவருக்கும் பங்கு உண்டு என்றால் சரிதான். என் அப்பாவின் உடன் பிறந்தவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. நான் பிராதிலும், நிரூபணவாக்குமூலத்திலும் சொல்லியுள்ளது போல் தாவா சொத்தில் இருந்து ஒருபோதும் வருமானம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. சொத்துக்களை பற்றி எனக்கு எந்த விபரங்களும் தெரியாது. என்றும் எனவே எனக்கு வழக்கு தாக்கல் செய்ய உரிமையில்லை என்றால் சரியல்ல. என் தாத்தாவின் மற்ற சொத்துக்களை என் அப்பா விற்றிருப்பதை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. சொத்தை வாங்கியவர்கள் யார் என்று தெரியாததால் அவர்களை சேர்க்கவில்லை. அந்த சொத்துக்களை என் அப்பா விற்றபோது நாங்கள் ஆட்சேபணை செய்யவில்லை. அவருடைய கஷ்டத்திற்கு அவர் விற்றார். நான் செலுத்திருக்கம் நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. நான் சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றும், சொத்தைஅனுபவித்து வருவதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்திருப்பது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இனிமேலும், என் அத்தைகளை அவர்களது

வாரிசுகளையும் வழக்கில் தரபப்னிராக சேர்க்க நடவடிக்கை எடுக்கபோகிறேனா என்றால் அவர்கள் இந்த வழக்கிற்கு தேவையில்லை என்பதல் இந்த வழக்கில் எடுக்கப்போவதில்லை. என் தாத்தாவின் சொத்துக்களில் என் அத்தைகளுக்கு பாத்தியம் உண்டு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு சொத்து பற்றி எதுவும் தெரியாது, எனக்கு சொத்தில் எந்த பாகமும் கிடையாது என்றும், என் அப்பாவையும் 8ம் பிரதிவாதியும் கஷ்டபடுத்த வேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கதை தாக்கல் செய்து என் அப்பாவிற்கு வேதனை கொடுத்ததால் அந்த வேதனையால்அவர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு என் அப்பா நகை எதுவும் போடவில்லை. என் அப்பா ஒரு சொத்தை விற்று என் அக்கா ஞானத்திற்கு நகை போட்டார் என்றால், சொத்தை விற்றதை வைத்து நகை போடவில்லை, கையில் இருந்த பணத்தில் நகை போட்டார். நான் என் அத்தை மகள் தெய்வம் என்பவர்இடம் இருந்து கிரையம்வாங்கிய சொத்திற்கு என் அப்பாதான் பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட எசொத்தை விற்று பெண் மக்ககளுக்குதான் செய்தார்கள் என்றால் சரியல்ல. புலஎண். 544/1 சொத்தை ஆனந்த்ராஜ் என்பவருக்கு என் அப்பா விற்று அந்த பணத்தை வைத்து எனக்கு செய்முறை செய்தார் என்றால் சரியல்ல. 2010ம் ஆண்டு என் அப்பா பூர்வீத சொத்துதை விற்று எனக்கும் என் சகோரதரிக்குசெய்முறை செய்தார் என்றால் சரியல்ல. என் அக்கா ஞானத்திற்கு விற்றதில் இருந்து கிடைத்த பணத்தை நாங்கள் பங்கிட்டு பிரித்து கொண்டோம் என்றால் சரியல்ல. அவ்வாறு எல்லா சொத்துக்களை விற்று செலவு செய்து விட்டதால் தாவா சொத்துக்களை 8ம் பிரதிவாதிக்கு

எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு ஒரே பேரன் 8 பிரதிவாதி என்றால் சரிதான். நான் எவ்வித முகாரந்திரம் இல்லாமல் வழக்கு தாககல் செய்துள்ளதால் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.03.19 10:06:59 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.